**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, NAGAPATTINAM**
**SESSIONS CASE No. 121/2022**

**Deposition of witness for prosecution : PW - 1 (LW- 1 )**

| Name | வினோத்குமார் | Father's Name | அன்பழகன் |
|---|---|---|---|
| Village | | Taluk | |
| Age | | | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on 22.09.2025**

**முதல் விசாரணை**

நான் தற்போது செல்லூர் சிஎஸ்ஐ சுனாமி குடியிருப்பில் வசித்து பெயிண்டராக வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரியை தெரியும். கடந்த 08.08.2021ம் தேதி இரவு 9.00 மணியளவில் என்னை எதிரி குச்சிக்காரி மகனே, தேவடியா மகனே என்று கெட்டவார்த்தைகளால் திட்டி தலையில் வெட்டினால், நான் அந்த வெட்டை எனது இடது கையால் தடுத்தேன். எனது கை மற்றும் உள்ளங்கையில் வெட்டு விழுந்தது. மீண்டும் என்னை இத்தோடு செத்து தொலைடா என்று சொல்லி வெட்டினார், நான் அந்த வெட்டை எனது வலது கையால் தடுத்தேன். எனது வலது கையில் வெட்டு விழுந்து காயம் ஏற்பட்டது. எனக்கும், எதிரிக்கும் 08.08.2021 தேதிக்கு முன்னதாக பிரச்னை ஏற்பட்டு முன்விரோதம் இருந்தது. எனக்கு காயம் ஏற்பட்டபோது நான் கத்தினேன். அக்கம் பக்கத்தினர் சம்பவ இடத்திற்கு ஓடிவந்தார்கள். அதனை பார்த்த எதிரி சம்பவ இடத்திலிருந்து ஓடிவிட்டார். பின்னர் எங்கள் ஊரைச்சேர்ந்த மாதவன் என்பவர் என்னை நாகப்பட்டினம் அரசு தலைமை மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார். அன்று இரவு போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடைதுதான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள், நான் நடந்த சம்பவத்தை சொன்னேன்.

**எதிரியின் தரப்பிலான குறுக்கு விசாரணை**

எதிரியும், நானும் ஒரே பகுதியில்தான் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். எதிரியை எனக்கு நன்றாகத்தெரியும். எதிரிக்கு அனைத்து போதைப்பழக்கங்களும் உண்டு. சம்பவ தினத்தன்று எதிரி நிதானமில்லாமல் போதையில்தான் இருந்தார். எதிரிக்கும், எனக்கும் சம்பவ தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்கு முன் பிரச்னை இருந்தது, நானும், எனது மனைவி, குழந்தைகளுடன் சாலையில் செல்லும்போது கல்லால் அடித்தார், நாங்கள் ஒதுங்கிக்கொண்டோம். அதுகுறித்து எதிரியிடம் கேட்டபோது பிரச்னை ஏற்பட்டது. எதிரி என்னை கல்லால் அடித்தது குறித்து நான் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. அதற்கு காரணம் எதிரியின் அம்மாவும், தம்பியும் வந்து எங்களிடம் சமாதானம் பேசினார்கள். எனக்கு கையில் வெட்டுப்பட்டதற்கு மருத்துவமனையில் இரண்டு கைகளிலும் கட்டு போட்டார்கள். கையில் கட்டுடன்தான் கையெழுத்து போட்டேன். எதிரியும், நானும் ஒரே தெருவில்தான் வசிக்கிறோம் என்றும், எதிரி குடிபோதையில் கையில் வைத்திருந்த அருவாளை நான் பிடுங்கியபோது என் கையில் வெட்டுப்பட்டது என்றும், போதையில் நிதானமில்லாமல் இருந்தவரிடம் ஆயுதத்தை பிடுங்கியபோது எனக்கு காயங்கள் ஏற்பட்டது என்றும், எதிரியை பழிவாங்க வேண்டும் என்பதற்காக என்னை இத்தோடு ஒழிந்து போடா என்று சொல்லி தலையில் வெட்டினார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. புகாரில் உள்ள விவரங்கள் தெரியாது என்றும், காவல் துறையினரால் தயாரிக்கப்பட்ட புகாரில் நான் கையொப்பம் செய்து விட்டு போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க புகாரில் உள்ள சங்கதிகள் தெரியும் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.